TM 0 58
11/2 ... 1992

*News and Articles in Tamil and English Please send them to:*

THE EDITOR,

'The Morning Star, Diocesan office, Vaddukoddai.

# THE MORNING STAR

Registered as a Newspaper at the Gener l Pos Office. Sri Lanka under No Q / J / 104 / News / 89

*Established : 1841 : A Christian Weekly : Published Every Friday*

**Vol:- 153 Jaffna, Friday 7 August 1992 No: 03**

RICHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

Subscription

**Island : Rs. 100/-**

***For Advertisements***

Apply to:

**THE MANAGER**

'The Morning Star, Diocesan office, Vaddukoddai

## Mrs Lizzie Gnanammah Paul



We regret to record the death of Lizzie Gnanammah Paul, wife of the late Rev Charlie B Paul, a former Teacher and Chaplain of Jaffna College ( 1942 - 1946 ) and a Worker at the Chankanai Church. The Rev. Charlie Paul and Mrs. Paul worked for most of their life in Singapore and came over to Ceylon during the war years. The Rev. Charlie Paul was a leading educationist and well known as a Teacher at the Anglo - Chinese School in Singapore and as a Minister of the Methodist Church. Mrs. Paul, who also hails from Chankanai died of a heart attack at the age of 86 at the Singagore General Hospital on the 22nd of March, 1992. She leaves behind two daughters, Dr. Freda M. Paul and Miss Grace P. Paul and a brother Mr. J T. Robert, a retired Post Master of Malaysia.

The funeral service was held in Tamil at the Methodist Church in Singapore on the 24th of March A former Bishop of the Methodist Church, Bishop T. R. Doraisamy paid a tribute to the deceased and spoke of her Christian life and dedication to the Tamil Methodist Church, Singapore from 1925 onwards. From 1942 to 1946 she was equally dedicated to the Chankanai Church and the work of her husband Charlie Paul as Chaplain at Jaffna College. The Rev. Prabhu Das Roberts preached the sermon and spoke of " The Anchor of the Soul ". The remains of Mrs. Paul were buried at Chua Chu Kony Christian Cemetery in Singapore.

## New Worker

Mr. K. E. Jeyarajah of Batticaloa who followed a short two years' course of training at the Christian Theological Seminary, Chunnakam has joined as a Worker in the Jaffna Diocese of the C. S. I. from May this year. He has assumed work as an Assistant Worker in the Mankulam Circuit.

## Clergy Retreat

The clergy of the Jaffna Diocese of the C. S I. met for three days for their Annual Retreat from the 27th to the 29th of April at the Uduvil Girls' College. The Bishop of the Diocese along with several of the clergy led the programmes in the Retreat. Despite the hardships of travel, almost all the clergy were able to participate in the Retreat.

## Bishop Kulandran Memorial Service in London

A service in memory of the late Bishop Kulandran was held at the Putney Church in London where Tamil Christians from Sri Lanka gathered for a Service of Thanksgiving A tribute was paid by Dr. Mrs. Chandra Sethurajan Bishop Lesslie Newbigin, former Bishop of Madras and one who was consecrated on the same day along with Bishop Kulandran at St. George's Cathedral at Madras on the 27th of September, 1947, preached a moving sermon.

## A Historic Day at Batticaloa

Wednesday the 6th of May which in our Church Calendar is the Day of St. John the Apostle and Evangelist, marked an important step in the history of the out reach work of the Jaffna Diocese in the Eastern Province. Work in the Eastern Province began in 1989 with the Rev. Earl P. Solomons initiating the work there. The work has now spread to eight different centres. At Uranee in Batticaloa town, a congregation has been worshipping regularly for the last three years, and a place of worship became very necessary. A new Church building was begun a few months ago and consecrated on the 6th of May at 3 . 00 p. m. by the Most Rev. Ryder Devapriam, Moderator of the Church of South India. The Rt. Rev D. J. Ambalavanar, Bishop of the Jaffna Diocese of the C S I. joined the Moderator in the Consecration Service. The Moderator also preached the sermon, where he expressed his delight in being able to consecrate a new Church in that part of the country. Many clergy from the Diocese were present at the Service. The Church was packed full and overflowing with members and friends who gathered for that important event. Distinguished guests at the Service included the Rt. Rev. Kingsley Swampillai, the Roman Catholic Bishop of the Batticaloa — Trincomalee Diocese and Mr. Prince Casinader, M. P. for Batticaloa and Mrs. Casinader.

## Dedication of Girls' Home Building

The consecration of St. John's Church was followed by the dedication of the new St. John's Girls' Home building at 5 . 00 p. m. This is a building that has also been just completed. About half the cost of the building was provided by the United Church Board for World Ministries, New York, and the other half was raised by the Diocese. This impressive building has two floors with a flat terrace roof on top Mrs. Sarojini Devapriam, the wife of the Moderator of the C. S. I declared open the building and the Moderator himself said the dedicatory prayer. The traditional oil lamp was lit by the Bishops present including the Roman Catholic Bishop, the Rt. Rev Kingsley Swampillai. Mr Prince Casinader, M. P. and Mrs. Casinader along with the other distinguished persons present joined in the lighting of the lamp.

The public meeting and the fellowship tea in the spacious ground floor Hall of the building was presided over by the Rt. Rev. D J. Ambalavanar. Miss N. Adisdamary from the Home, the first child to join the home gave the welcome speech in English. The chief speaker on the occasion was the Rt. Rev. Kingsley Swampillai. Bishop Swampillai said the people in the Eastern Province, including the members of his own Church were grateful to the Jaffna Diocese of the C. S. I. for starting so many service programmes in that part of the country. The Girls' Home for Orpaans and Destitute Children was indeed a blessing to the community. The Bishop continued that finding the money and putting up a building is not the most difficult part of the task. The more important task is the building of the character and the personalities of the children entrusted to us. He said, this must be done in a spirit of love and understanding. The Bishop also emphasised that the Church has awakened to its responsibilities for the poor. The Church should direct its attention to the elimination of the causes of poverty and economic oppression. He said, he was delighted to participate in this function and wished the Girls' Home God's blessings.

The M. P. for Batticaloa Mr. Prince Casinader was the other important speaker at the function. He said, he made a special trip from Colombo to participate in the function, and was happy and proud that the beautiful Church building and the impressive Girls' Home building have been completed. He said, he was proud to have inaugurated the Girls' Home nearly three years ago when the Rev. Earl P. Solomons started it with very modest facilities. That this could have grown to such an impressive proportion within three years is a remarkable tribute to the Rev. Solomons' dedication and enterprise. This Home is indeed a centre of love and compassion for orphans and children from very poor homes. He had noticed the cheer and joy in the faces of the children which is itself a tribute to the work being done there. He was grateful that the Diocese has had the courage and the vision to engage in the service project, investing so much of money at a time when everything looked discouraging. This function itself, he said, was a reminder that the work of God's service can go forward whatever the circumstances may be. The Moderator, Bishop Devapriam and Mrs. Sarojini Devapriam also spoke at the function. Both of them underlined the fact that Christian mission always expressed itself in Christian love, particularly towards the poor, helpless and downtrodden. They hoped very much the children grow in their faith and blossom out as excellent citizens and exemplary Christians in their lives.

The Rev. S. S. Karunarajah, Director of the Methodist Home for Mentally Handicapped Children in Batticaloa was another of the speakers who expressed his appreciation for the work of the Diocese and particularly its service programmes.

Dr. Bob Porter our missionary at Jaffna College gave greetings on behalf of the U C B W M. He said, he was happy to observe the developments of this Home where a number of girls are provided sponsorships by the U C B W M Sponsorship Programme. He was also happy that the U. C B W M was able to finance nearly half of the building cost. This Home, he hoped will be able to provide the Christian nurture for the children in its care.

The Rev. Fr. Dominic Swaminathan, Rector of St. Joseph's Seminary, Batticaloa was yet

Continued on Page 4

# உதயதாரகை

Estd 1841

மலர் 153 07 - 08 - 1992 இதழ் 03


## புனிதத்துவம் அடைந்த பேராயர் அருள்திரு சபாபதி குலேந்திரன்

1992ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14ம் திகதி மாலை 5.00மணி அளவில் பேராயர் சபாபதி குலேந்திரன் மறுமைக்குள் பிரவேசித்தார். அன்னாரது இழப்பு கிறீஸ்தவ சமூகத்துக்கு மாத்திரமல்ல தமிழ் சமுதாயத்திற்கே பேர் இழப்பாகும். அன்னார் இன் னூ ற் றா ண் டி ல் வாழ்ந்த பெரியர்களுள் ஒருவராக வைத்து எண்ணப்படுபவர். தொண்ணூற்றியொரு வருடகால ஜீவியத்தை கடவுளுடைய சேவைக்கும் தமிழ் மக்களுடைய உரிமைப் போராட்டத்திற்கும் செலவழித்தவர். தன்னை ஆட்கொண்ட கடவுளுக்கு சாட்சியாக வாழ்ந்த ஓர் உண்மைச் சீடன் இயேசுக் கிறீஸ்து உயிர்த்தெழுந்தார் கடவுள் நம்மோடு இருக்கிறார் என்ற கருத்துக்களுக்கு இவருடைய வாழ்வு சாட்சியாய் அமைகிறது.

திருப்பணியாளரின் ஊழியத்தின் மகத்துவத்தை மேம்படுத்தியவர் சிறந்த அறிவு ஆற்றல் மிக்க ஒருவர் திருப்பணி ஊழியத்திற்கு தம்மை அற்பணித்தமை மற்றவர்களுக்கு ஓர் சிறந்த எடுத்துக் காட்டாகும். 1947ம் ஆண்டு தென் இந்தியத் திருச்சபை யாழ்ப்பாண அத்தியட்சாதீனத்தின் முதல் பேராயராக விளங்கினார். இவருடைய சிந்தனைகள் பேச்சுக்கள் செயற்பாடுகள் யாவும் கடவுளோடு சேர்ந்து வாழ்ந்த நல் உறவின் சங்கமமேயாகும். இறையியல் கருத்துக்களை அன்றாடக வாழ்க்கையோடு சேர்த்து சிந்தித்தவர். அரசியல் பிரச்சனை சமூகப் பிரச்சனைகள் தனிப்பட்ட வாழ்வுப் பிரச்சனைகள் ஆகியவற்றை இறையியல் கண்ணோடு நோக்கி அவற்றை தீர்க்க முற்பட்டவர் திருச்சபை வளர்ச்சிக்கும் சபை ஐக்கியத்திறகும் அரும்பாடுபட்டவர். தென் இந்தியத் திருச்சபையின் வழிகாட்டியாக விசுவாச தந்தையாக விளங்கியவர். ஓர் கிறிஸ்தவ அடியானாக உலக இச்சைகளை நாடாத வீண் பெயரையும் புகழையும் நாடாது எளிமையான வாழ்க்கையை நடாத்தினவர். இவ்வுலகத்திலே வாழ்ந்தாலும் கடவுளுடைய இராட்சியத்தின் பிரஜையாக வாழ்ந்தார். தனக்கென சொத்து சுகங்களை தேடி வைக்கவில்லை. (வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும் தெய்வத்துள் வைக்கப்படும்) என்ற குறளுக்கு ஏற்ப வாழ்ந்தவர். அவருடைய நாடித்துடிப்பு ஒவ்வொன்றும் கடவுளைத் துதித்த வண்ணமே இருந்தது "The Chief end of a Person's life is to glorify God and to enjoy Him for ever" ஒருவனுடைய வாழ்வின் இலட்சியம் கடவுளைத் துதித்தலும் அவரோடு எப்பொழுதும் மகிழ்ந்திருத்தலும் ஆகும். என்ற வெஸ்மினிஸ்ரர் பிரகணத்திற்கேற்ப வாழ்ந்தவர். அவர் கனவிலும் நினைவிலும் கடவுள் திருப்பணியை எவ்வாறு செய்து முடிக்கலாம் என்று சிந்தித்த வண்ணமே இருத்தல். கடவுளைப் பற்றும் விசுவாசத்தில் அஞ்சா நெஞ்சம் படைத்தவர். யாருக்கும் பயப்படமாட்டார். தான் கொண்ட உறுதியான நம்பிக்கைகளை துணிகரமாக பக்க சார்பில்லாது எடுத்துக் கூறுவர்.

தமிழ் மக்களுடைய அடிமைத்தனம் நீங்கி சுதந்திரமாக வாழ வேண்டுமென வாஞ்சை கொண்டவர். அரசியல் அதிகாரிகள் தமிழ் மக்களுக்கெதிராக அடக்குமுறை சட்டங்களை அமுலாக்கும் போது கொதித்தெழுந்தவர் கண்டனக் கடிதங்களை அரசியல் தலைவர்களுக்கு எழுதியவர் தமிழ் மக்கள் பெருமையோடு வாழக்கூடிய ஓர் தாய்நாடு இருக்க வேண்டுமென வாஞ்சித்தவர். தமிழ் மொழியிலே கருமங்களை ஆற்றக்கூடிய சூழ்நிலை உருவாக வேண்டுமென விரும்பியவர். தமிழ் மக்களுடைய பிரச்சனை பற்றி அவர்கள் அபிலாசைகள் பற்றி எடுத்தியம்பியவர் இது அவருடைய கடைசிக்கால அபிலாசைகளில் ஒன்றாகும்.

யாழ்ப்பாணக் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி ஆதீன வைத்தியசாலைகள் ஆகிய ஸ்தாபனங்கள் இவருடைய விடாமுயற்சியினாலேயே இப்பொழுதும் தனித்தியங்கும் ஸ்தாபனங்களாக விளங்குகின்றன. 1962ம் ஆண்டு அரசாங்கம் தனியார் பாடசாலைகளை சுவீகரித்த பொழுது மேற்குறிப்பிட்ட இரு பாடசாலைகளும் தனித்தியங்க வேண்டும் என்று வாதிட்டவர் இதன் பலாப்லன்களை இன்று நாம் அனுபவிக்கக் கூடியதாய் இருக்கிறது.

இவர் புத்தகங்களை எழுதியுள்ளார் அவற்றுள் தலை சிறந்தது எனக் கருதப்படுவது "Grace in Chistianity and Hinduism" இன் நூல் மேல் நாட்டவர்களால் மிகவும் போற்றப்படுகிறது. இவருடைய நூல்கள் ஆராட்சி செய்வதற்கும் கலாநிதிப் பட்டங்கள் பெறுவதற்கும் உரிய துணை நூல்களாக கருதப்படுகின்றன.

இவரின் வாழ்வு நம் எல்லோருக்கும் ஓர் சிறந்த எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது. உத்தமமும் உண்மையுள்ள ஊழியக் காரனாக விளங்கி தன் வாழ்க்கையின் ஓட்டத்தை வெற்றியோடு ஓடி முடித்து வெற்றியின் கிறீடத்தை அணிந்து கொண்டார். பாராட்டுதற்குரிய இவருடைய வாழ்வு மகிழ்ச்சியும் நகைச் சுவையும் நிறைந்தது இவர் ஆற்றிய பணியினை நாம் தொடர்ந்து செய்வதே நாம் இவருக்குச் செய்யும் நன்றிக் கடனாகும்.

G. R.

## நூல் ஆய்வு

நூல் : '' அருள்திரு சேவக் எஸ் எஸ் செல்வரத்னம் அடிகளார்

ஆக்கியோன் : அருள்திரு டி. ஆர். அம்பலவாணர். M. A. B. D.

வெளியீடு : கிறிஸ்தவ சேவ ஆச்சிரமம், சுன்னாகம்

இலங்கை, 1990 பக்கங்கள் 192

பெரியண்ணனின் வாழ்க்கையும் பணியும் நூலை வாசித்தேன். வாசிக்கும் போது ஏற்பட்ட உணர்வுகளோ பல. அவற்றை சுருக்கமாக எழுதுகிறேன். நான் ஈழத்து ஆசிரியர் செங்கை ஆழியானின் வாசகன். அவர் நாவல்களை வாசிக்கத் தொடங்கினால் முடித்து விட்டுத் தான் வைப்பேன் இந்த நூலையும் வாசிக்கத் தொடங்கினேன். இரவு 6.30 நிமிடம் இரவு 12 மணியளவிலே நூலின் நிறைவைக் கண்ட பின்னே தூக்கம் வந்தது. ஏனெனில் என் கருத்துப்படி ஒரு நூலாசிரியனுக்கு இருக்க வேண்டிய நல்ல தன்மை ஒவ்வொரு பந்தி முடிவிலும், ஒவ்வொரு அத்தியாயம் முடிவிலும் அடுத்து என்ன நடந்தது / நடக்கப் போகின்றது. என்னும் ஆவலைத் தூண்டி விடுவதாகும். இந்நூலிலே இத்தன்மை மிகையாகக் காணப்படுகிறது

ஈழத்து எழுத்தாளர்களை விரல் விட்டு எண்ண முடியும். கிறிஸ்தவ எழுத்தாளர்களை / ஆதீன எழுத்தாளர்களை அதுவும் விசேடமாக தமிழில் காண்பது அரிது. எல்லோரும் அறியக்கூடிய வகையில், இலகு தமிழில், சுவையுடன் குறள் பழமொழி நயத்துடன் ஓர் நூல் வெளியீடு நம் தேவையையும் இப்படியான எழுத்தாளரின் அவசியத்தையும் உணர்த்துகின்றது. குறிப்பாக இந்நூல் எழுத்தாளன் ஒரு திருப்பணி ஊழியன் பெரிய கடமைகளையும் செய்து வரும் அதே நேரம் விடா முயற்சியுடன் மின்சார வசதி, அச்சு வசதி குறைவிலும், நாட்டு அரசியல் குழப்பங்களிலும் உடல் நிலையின் சோர்விலும் மனம் தளராது இந்த அழகிய பயனுள்ள பணியைச் செய்தமைக்காக அவருக்கும் இறைவனுக்கும் நன்றிகள் உரித்தாக.

இந்நூலைக் காணும்போது பெரியண்ணனின் வளர்ச்சி மாத்திரம் அல்ல அவருடன் தொடர்புடையவர்கள், நிறுவனங்கள், கல்லூரிகள், அரசியல் சூழ் நிலைகள் என்பவற்றை பரந்தளவில் அறியும் வாய்ப்பு கிடைத்தது. பொதுவாக கூறின் பெரியண்ணனின் அதே வயதுடையவனாக அவர் காலத்தில் வாழ்ந்த உணர்வும், நினைவும் எனக்கு ஏற்பட்டது,

ஆனாலும் இந்நூலில் இடம் பெறக் கூடிய மேலும் சிலவற்றை சேர்கக் கூடும் என எண்ணுபவற்றையும் திருத்தலாமென எண்ணுபவற்றையும் காட்டுகிறேன். இந்நூலை வாசிக்கும் போது இவ் எழுத்தாளன் ஓர் C. S. I. ஐச் சேர்ந்தவர் என்பது தெரியாதவருக்கும் விளங்கும். ஏனெனில் பெரியண்ணன், சின்னண்ணன், சாம் அண்ணன் தொடர்பான அநேக காரியங்கள் C. S. I. உடனேயே தொடர்பு உடையது. இதற்கு காரணமும் உண்டு. இவர்கள் யாவரினதும் பின்னணி C. S. I. ஆனாலும் இதைக் கொண்டு ஆச்சிரமம் நோக்கம் மெதடிஸ்ட், அங்கிலிக்கன் ஆகிய பிறசபைகளையும் உள்ளடக்கியது. இவற்றின் தொடர்பு, பங்களிப்பு குறைவாக உளது.

பெயர்களைக் குறித்து சரியாக விளங்குவதற்கு அவற்றை ஆங்கிலத்திலும் எழுதலாம். (வண. P. T. காஷ்) 5ம் பக் (மிறக்கிள்)- பக் 20 போன்றன. 3ம் பக்கத்திலே காணப்படும். சி. எம். எஸ். என்பது பலருக்கு தெரியாத ஒன்றாக இருக்கும். இது போன்ற Abriviations ஐ விளக்கத்துடன் குறிப்பிடுவது நல்லது.

அடுத்து படங்களுடன் கூடிய நூல் அதிகம் உற்சாகத்தை அளிக்கிறது. அதே வேளை அந்தப் படங்கள் உரிய இடத்தில் சேர்க்கப்படாமை உணர்ச்சி நயத்தைக் குறைக்கின்றது. உ+ம் :-பெரியண்ணனின் இறுதி ஊர்வலம் 140ம் பக்கத்தில் சேர்க்கப்பட வேண்டியது. 136ம் பக்கத்தில் உள்ளது.

சில மாற்றங்கள் என்று இறுதியில் உள்ளதை முன் உள்ளடக்கத்தில் குறித்திருந்தல் நல்லது. ஏனெனில் வாசிப்போர் பிழை என்று உணராது திருத்தி வாசிக்க உதவும் ஆசிரியருக்கு கடவுள் கொடுத்த பெலத்துக்கும் ஞானத்துக்கும் நன்றிகள்.

A. S. T. A

## நான் பிரயாணம் செய்த துவிச்சக்கர வண்டி திடீரென வானத்தில் பாய்ந்தது

அன்று க. பொ. த. சாதாரண தர பரீட்சையின் முடிவுகளை வெளியிடும் நாள். நான் மன அங்கலாய்ப்போடு என் முடிவுகளைப் பெற வரிசையில் நிற்கின்றேன். இறுதியாக என் முறை வந்தது எனக்கு எல்லாப் பாடங்களிலும் அதி திறமைச் சித்தி கிடைத்திருந்தது. எனக்கோ, என் பெறுபேறுகளை வேகமாகச் சென்று வீட்டில் அறிவிக்க வேண்டுமென்ற அவா எழுந்தது. எனவே, துவிச்சக்கர வண்டியை வேகமாகச் செலுத்தினேன். அது திடீரென வானத்தில் பாய்ந்தது.

இது ஒரு வினோதமன்றோ உலக அதிசயங்களில் எட்டாவதாக கருதக் கூடியதாக எனக்குத் தோன்றியது வளிமண்டலத்தில் சஞ்சரிக்கின்ற வான ஊர்திகளைக் கண்டு பிடித்த விஞ்ஞானிகளும் கூட எத்தனை நாட்களாக வியர்வை சிந்தி உழைத்த பின்னரே அதில் வெற்றியடைந்தனர். ஆனால் நானோ அவ்வாறு முயற்சி செய்யவேயில்லை இவ்வாறு நான் பறக்க முடியுமானால், பறக்கும் உயிரினங்கள் - அதாவது பறவைகள் - என்ற கூட்டத்தில் ஓர் உறுப்பினன் ஆவேன். இவ்வாறு பறவை என்ற நிலையை அடைவதை நான்'' என்றென்றும் அடைய விரும்பியவன். இதற்குரிய காரணம், பரிசுத்த வேதாகமத்தில் இருக்கும் ஓர் அருள்வாக்கால் விளங்கும். அவ்வருள் வாக்கானது, ''வானத்துப் பட்சிகளைக் கவனியுங்கள். அவை அறுப்பதுமில்லை, களஞ்சியத்தில் சேர்த்து வைப்பதுமில்லை'' அதாவது பறவைகள் மனிதரைப்போல் உணவு சேர்த்து வைப்பதில்லை. எனவே பறவைகள் விஷேசித்தவைகளல்லவா?

மனிதன் அனுபவிக்கும் சுதந்திரத்தைவிட, பறவைகளின் சுதந்திரம் எல்லை நீண்டு செல்கிறது. உலகின் மூலைகளிலுள்ள அதிசயங்களைக் காணக்கூடிய சந்தர்ப்பம் கைகூடும். உலகில் ''இரும்புத்திரை உள்ள நாடுகள், அதாவது சமத்துவம் நிலவும் நாடுகளினுள்ளே சென்று அவற்றினுள் நடைபெறும் மனித உரிமை மீறல்களை உலக நாடுகளுக்கு அம்பலப் படுத்துவேன். இரகசியமாக ஐ. நா. சங்கத்தின் உத்தரவின்றி பயங்

3ம் பக்கம் பார்க்க

## தாரகை ஒளி

முடியந்தக்க வழியில் முயலாத முயற்சி பலர்
கூடிப்பாது கத்தாலும் தவறுபடும்.

## எங்கள் கருத்து

### " என் ஜனத்தை ஆற்றுங்கள் தேற்றுங்கள் "

இன்றைய இனக்கலவரங்களின் விளைவாக நமது மக்கள் சொல்லொனாத் துயரங்கள் அடைந்து வருகின்றனர். மனநிம்மதியற்று வேதனைப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். வாலிபர் சமுதாயம் அழிக்கப்பட்டு வருகிறது. சிறுபிள்ளைகளின் மனம் பெருமளவில் பாதிக்கப்பட்டுளது. சுருங்கக் கூறின் தமிழ்ச் சமுதாயத்தைப் பூண்டோடு அழிப்பதே ஸ்ரீ லங்கா அரசின் திட்டமாகக் காணப்படுகிறது.

தமிழர்கள் மீதான கொடுமைகள் 1970 ஆம் ஆண்டிலிருந்து தீவிரமடைந்து - 1983 ஆம் ஆண்டோடு நிலைமை படுமோசமடைந்தது. இலங்கை அரசு, கடந்த ஆண்டுகளாகத் தமிழ் மக்களைப் பலவழிகளில் கொடுமைப் படுத்தி வருகிறதை வெளிநாடுகள் அறிந்தும், ஏற்ற ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்காதிருப்பது நமக்கு அதிக கவலையளிக்கிறது. அழிவின் விளிம்பில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் மக்களின் சார்பாக மத்தியஸ்தம் செய்ய சுவீடின், அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் முன்வந்தும், ஸ்ரீ லங்கா அரசு இதில் அக்கறை காட்டாதிருப்பது, அவர்களின் மறைவான திட்டத்தை தெளிவாகக் காணப்படுகிறது. இது அனைவரும் அறிந்த உண்மை.

இலட்சிய வேட்கையுடன் - தியாக மனத்துடன் தமிழ் மக்களின் பிறப்புரிமைகளுக்காக அயராது போராடி வரும் தமிழ்ப் போராளிகளை அழிக்க முடியாத படியால், தமிழ் மக்களைப் பூண்டோடு அழித்து, இவ்வினப்பிரச்சனையைத் தீர்க்கலாமென நமது ஜனாதிபதி எண்ணுகிறார் போலும்! இது கைகூடக் கூடியதல்ல என்பதை அவர் அறியப் போகும் நாள் தொலைவில் இல்லை. கூடிய விரைவில் இறைவனின் தீர்ப்பு வெளிவரும்.

அடக்கி ஒடுக்கப்பட்டு வரும் தமிழ் மக்களின் அபயக் குரலை இறைவன் கேட்கிறார். இவர்களின் இரத்தக் கண்ணீரைக் காண்கிறார். '' என் ஜனத்தை ஆற்றித் தேற்றுங்கள் '' என திருச்சபையை நோக்கிக் கூறுகிறார். அவரின் குரலுக்கு நாம் செவிமடுத்து, துன்புற்று வரும் நம் மக்களுக்கு ஆவன செய்வது நம் கடமை.

---

நான் பிரயாணம் செய்த .......

2ம் பக்கத் தொடர்ச்சி

கர ஆயுதங்களை உற்பத்தி செய்யும் நாடுகளின் இரகசிய ஆயுதத் தயாரிப்புக்களை வெளிப்படுத்துவதன் மூலம் யுத்த ஆபத்தைத் தவிர்க்க நடவடிக்கைகளை மேற்கொள்வேன்.

ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு எல்லை நிச்சயம் உ டு. ஒரு காணிக்கு அதன் வேலி, ஒரு நாட்டிற்கு அதன் வரையறுக்கப்பட்ட எல்லைப் பிரதேசம், உலகிற்கு, அதைச் சூழவுள்ள வளிமண்டலம இவ்வாறு எல்லைகள் உண்டு அவ்வாறே இந்த ஞாயிற்றுத் தொகுதிக்கும் ஒரு எல்லை இருப்பது நிச்சயம். இவ்வெல்லையை அடைந்து அதற்கு வெளியே பரவியிருப்பது என்ன என்பதைக் கண்டு பிடிக்க முயல்வேன்.

விஞ்ஞானிகளால் தயாரிக்கப்பட்டு விண்வெளியில் விடப்படுகின்ற செய்ம்மதிகள், வானிலை ஆய்வுகூடங்கள் ஆகியவற்றின் செயற்பாட்டைக் கற்று, அவற்றின் செயற்பாடுகளை தடையின்றி ஒழுங்காக நடைபெற விண்வெளிக்குச் சென்று அவற்றை வழிநடத்துவேன்.

சூரியனைச் சுற்றி வருகின்ற கோள்களையும் ஆராய்ந்து அவற்றில் உயிரினங்களோ பெறுமதி வாய்ந்த கனிப்பொருட்களோ காணப்படுகின்றனவா என அறிந்து உலக மக்களின் வளங்களைப் பெருக்குவேன்.

இவ்வாறு நான் செய்த ஆராய்ச்சிகள், கண்டுபிடிப்புக்கள் என்பவற்றிற்காக எனக்கு நோபெல் பரிசு கிடைக்க வாய்ப்பு உண்டா !

( அகால மரணம் அடைய சில நாட்களுக்கு முன்பு டானியல் சுதர்ஷன் சாமுவேலால் எழுதப்பட்ட கட்டுரை )

---

## ஆச்சிரம நண்பர்களுக்கு தெ. இ. திருச்சபை புதிதல்ல

— மட்டக்களப்பான் —

தென் இந்திய திருச்சபைத்தேவாலயம் இங்கு நிறுவியது பற்றி சபை வளர்ச்சியினூடாக, ஏனைய திருச்சபை சிலவற்றுக்கு, புதிதானதொரு ஐயப்பாடுகளும், சந்தேகவுணர்வுகளும் தலை தூக்கியிருக்கின்றது!

கிரான் - கிறிஸ்த சேவ ஆச்சிரமத்தோடு தொடர்புடைய - ஈடுபாடுள்ள கிறிஸ்தவ நண்பர்களுக்கும் சகோதரர்களுககும், இந்த திருச்சபையும் அதன் வழிபாட்டு முறையும், அதனூடாக நடைபெற்று வரும் சகோதர ஐக்கியவுணர்வுகளும் புதிதான ஒரு காரியம் அல்ல ஏனெனில், கிரான் ஆச்சிரமத்தை ஸ்தாபித்தவர்களான மறைந்த பெரியண்ணன், சின்னண்ணன் ஆகியோர், அதன் தளத்தை நல்ல தூர நோக்கோடு சிந்தித்துத்தான் உறுதிப்படுத்தியுள்ளார்கள் என்பது இப்போது நன்கு தெளிவாகின்றது. இதைக் காணும் சபைகளுக்கு ஆத்திரம் ஏற்படுவதில் வியப்பொன்றும் இல்லை.

ஆனால், கிரான் ஆச்சிரம ஸ்தாபகர்கள், தாங்கள் நினைத்திருந்தால் ஆச்சிரமத்தை ஸ்தாபிக்கும் போது, கிரானில் அப்போது இருந்த ஓரிரு கிறிஸ்தவ குடும்பங்களை தென் இந்திய திருச்சபைக்கு வழிப்படுத்தியிருக்க முடியும் ! அங்கு தான் சீ. எஸ். ஐ யினதும் - ஆச்சிரமத்தினதும் ஒருமைப்பாடும் ஐக்கியமும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்கள் கிரானில் இருந்த பாரம்பரிய மெதடிஸ்த சபை உறுப்பினர்களை தன் வழிப்படுத்த விரும்பவில்லை மாறாக – '' இறைவனின் பணிக்கு எவரும் அடைக்கலமே ', என்று தங்கள் வழிமுறைகளைச் சரியாக வழிப்படுத்திச் சென்றுள்ளனர் !

ஆச்சிரமத்தில் வழிபாட்டு நூலை தென் இந்திய திருச்சபை நூலாகவே வழிப்படுத்தி வந்துள்ளனர் ! இன்னும் கைக் கொண்டு வருவதும் அதுவே. ஆனால் இடையில் சில மதவாதிகள் - அல்லது சபை வாதிகள் இப்போது தங்கள் வழிபாட்டு தியான காலத்தில் ஆச்சிரம பண்பாட்டையே மாற்றி வருவது காண கூடும். வேதாகமத்தைத் திருத்தி மொழி பெயர்க்கப்பட்டு தங்களின் புதுமுறையான வழிபாட்டு நூலை ஆச்சிரம வழிபாட்டில் திணித்திருக்கின்றனர் ! இது ஆச்சிர வணக்க ஸ்தாபிகளுக்கு - நண்பர்களுக்கு ஆச்சிரம சகோதரர்களுக்கு பெரும் பிரச்சினையாக இருந்து வருகிறது.

வழிபாட்டு நூல் ஆரம்பத்தில் இருந்தே, சீ. எஸ். ஐயாக இருந்து வந்தது மாத்திரம் அல்ல அது வேத வாக்கியங்களைத் திரிபு படுத்தாமல் வேதாகமத்துக்கு இணைய தயாரிக்கப்பட்டுள்ளது. பக்தி ரசமும், தியான வழிபாடுகளுக்கேற்ப அனுகூலமான சிந்தனை வெளிப்பாடும கொண்டது இந்த நூலினூடாகக் கிடைக்கின்ற அமைதி இப்போது வழிப்படுத்தப்படுகின்ற மொழி பெயர்ப்பு நூலில் அமைவதாகத் தெரியவில்லை. வெறும் கடமை வழிபாடாகவே இருக்கின்றது.

ஊறணி தெ. இ. திருச்சபை தேவாலயத்துக்கு வணக்க வழிபாட்டுக்கு வருகின்ற ஆச்சிரம நண்பர்களுக்கு, இந்தப் பாரம் குறைந்து ஒரு பெரும் பிரச்சினையில் இருந்து விடுபட்ட நிம்மதியைக் காணக் கூடியதாகவுள்ளது.

ஆலயம் அமைவது, இறை வழிபாட்டுக்கே தவிர, சபை வளர்ச்சிக்கும் சுயாதீனத்துக்கும் அல்ல. இதை நன்கு ஆராயும் புத்தியுள்ளவர்களுக்கு, தென் இந்திய திருச்சபை இங்கு புதிதான ஒன்றல்ல என்பது நன்கு புரியும் !

---

## தமிழ் மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதியில் பாகுபாடு

யாழ் மாவட்டத்தில் இருந்து க. பொ. த. உயாதரப் பரீட்சை எடுத்த மாணவர்களின் பல்கலைக் கழக அனுமதியில் மிகவும் பாரபட்சம் காணப்பட்டுள்ளது. சென்ற பரீட்சையில் ( 1990 / 1991 ) பல்கலைக்கழக அனுமதி பெறுவதற்கான வெட்டுப்புள்ளிகள் யாழ் மாவட்டத்திற்கு மிகவும் அதிகமாக உள்ளது என்பதை கீழ் குறிப்பிட்ட அட்டவணையில் இருப்து அறியலாம்

| | யாழ் | கொழும்பு |
|---|---|---|
| பொறியியல் I | 290 | 263 |
| பொறியியல் II | 285 | 254 |
| பல்மருத்துவம் | 269 | 268 |
| உ. விஞ்ஞானம் | 243 | 238 |
| பௌ. விஞ். | 235 | 204 |
| கலை | 254 | 235 |
| வர்த்தகம் | 277 | 260 |

அரசாங்கத்தின் குறிக்கோள் வளர்சி குறைந்த பகுதிக்கு சில சலுகைகள் கொடுக்கப்பட வேண்டும் என்பதே. ஆனால் கொழும்பு, யாழ்ப்பாணத்திலும் வளர்ச்சி குறைந்த பகுதி என்று அரசாங்கம் கணிக்குமாயின் அது ஒரு ஆச்சரியத்திற்குரிய விஷயமாகும்.

தமிழ் மாவட்டங்களில் மாணாக்கர் ஆசிரியர் வீதாசாரத்தைப் பார்க்கும் போது மற்றைய மாவடங்களில் 24:1 என்பதும் இங்கு 47:1 என்பதும் குறிப்பிடத் தக்கது.

இந்தபாகுபாட்டை பார்க்கும்போது தமிழர்களின் தாய்நாட்டுக் கோரிக்கை சரி என்றே எண்ணத் தோன்றுகிறது.

---

## வழி காட்ட வந்த ஒளி விளக்கு !

— கவிஞர் — என். கே. தயாளகுணசீலன் —

ஈனருக்காயுயிர் ஈந்த யேசுவை
ஏத்தி வையகம் கோயில் கட்டுது !
ஆன நற்பணி யாது செய்துள
அன்பரின் நினை வாலயம் தன்னிலே,
மீனவர்க்கருள் தந்த வேதனி ர
மீது நாம் ஒரு கோயில் கட்டுவோம் !
வானவன் அருள் வையகம் கிட்டிட,
வந்த பாலனின் தொண்டுகள் செய்குவோம் !

தூய யோவான் ஆலயம் ஒன்றினை,
துணைக் கோடாக்கியே தொண்டுகள் செய்திட,
நாயகர் பலர் நாடி வந்தனர்,
நான் அவர் பாதம் நாடி வணங்கினேன் !
ஆய நற்கலை யாவும் கற்றிட
ஆண்டவன் அருள் எம்மிற் சேர்ந்தது !
நேயமாய்ச் சிறு பிள்ளைகள் கற்றிட
நேச விண்பரன் வழிகள் அமைத்தனன் !

இப்பெயர்ப் பணியினை யார் செய்ய வல்லவர் !
இறைவன் ஒருவனே செய்து முடித்தனன் !
தப்பிதம் நேரலாம் தறறுகள் வந்தெமை,
தன் வழி மாற்றிட சாட்சி பகரலாம் !
எப்பெயர் பட்டதோர் இடுக்கண் நேரினும்
இப்பணி தொடர்வது இறைவனின் வரமே !
மூப்பெருங் கடவுளெம் முன்னர் செல்லுவார்
மூழும் சேனை யாவையும் வெல்லுவோம் !

எத்தனை ஏழைகள், எத்தனை விதவைகள் ;
எண்ணில் அடங்காது இறைவனின் பிள்ளைகள் !
அத்தனை பேருமிங் ககதியாய் உள்ளனர்,
ஆரிதைத் தேடி நல் வழிகள் சமைத்தனர்
சுத்த நல் இருதயம் உள்ள நேசர்கள்
சுமந்து சிலுவையைத் தொண்டுகள் செய்கிறார்
அத்தனே உன்னருள் எனக்கும் கிட்டிட
அடியேன் எந்தனை அர்ப்பணம் செய்கிறேன் !

தென் இந்திய திருச்சபை இங்கு வந்தது !
தெருத் தெருவாய்ப் பல சபைகளும் வருகுது !
அன்பு சத்தியம் இல்லா மனிதர்கள்
ஆண்டவர் திருப்பணி செய்தல் சாத்தியமா ?
இன்பம் பொங்கிட எம்மை அழைத்தவர்
இதயம் சோந்திட என்றும் இடம் கொடார் !
துன்ப சோதனை எம்மை வருத்தலாம் !
சோர்ந்திடாது எம் பாதையில் செல்லுவோம் !

ஆயர் அம்பலவாணர் எம் அடிகளார்
அவர் திருவடிகளைத் தினம் தினம் நினைத்திட
ஆய நற்பணி யாவையும் ஏற்று இங்(கு)
அருள் சுரந்திட அன்பினைப் பெற்றார் !
ஏய விற்பனனாய் திகழ்ந்திட்டார்
எங்களின் போதகர் சாலமோன் ஐயா !
மாய வித்தைகள் ஏதும் இங்கில்லை,
மயங்கிடாது நம் மன்னரை வாழ்த்துவோம் !

## ⚜ EDIORIAL ⚜

## The Parliamentary Select Committee

Last week Mr. A. K. Ranasinghe, the state minister for information, made a very bold statement about the ethnic problem. He said that the Parliamentary Select Committee will not be able to solve this vexed problem. The politicians of Sri Lanka have neither the capacity nor the inclination to settle this. The state minister therefore called upon the religious leaders to step in to sort the matter out.

Mr. Ranasinghe's comment aptly describes the mood of the Select Committee. It had slowly but surely degenerated to the status of the all - party coference set up after the racial riots in 1983. The deliberations of the all - party corference dragged on until everything turned out to be a fiasco.

The state minister has rightly pointed out that the major political parties do not have any interest in solving the national problem. They avoid the burning question of the day and try to entice the masses, harping on non - essentials. They know full well the economy has got into deep trouble and that dozens of Sinhalese and Tamil young men are dying everyday in this senseless war. But they are very reluctant to make any concreete proposal to end the blood shed.

Those who are at the helm of affairs beg the sinhalese people to bear with them until they destroy their enemies. It is clear that those who formulate governmental policy have not understood the harsh realities. We wish to congratulate Mr. Ranasinghe for the perfect assessment of the situation. He is throughly disillusioned with the political leadership. Our fervent hope is that a friendly nation or organization will mediate before the country falls into exhaustion and ruin.

The political parties in Sri - Lanka have learnt by experience that communal politics brings many dividends. Ten general elections were conducted in Sri - Lanka after independence. It can be safely said that at every election the party that promised to do greater harm to the Tamils than its rival, carried away all the prizes. Mr. S. W. R. D. Bandaranaike used communalism to fulfill his political ambitions, His successors excelled in the art and the country continues to bleed because of this reckless political activity. It is now clear as crystal that the party that promises to pacify the Tamils will go into political oblivion. We cannot expect that in the future a national leader will emerge who will be prepared to solve the ethnic problem and lose the support of his people

Robert Peel, who repealed the Corn Laws, and William Gladstone, who pacified Ireland, knew what was in store for them. But for these statesmen the good of the country was more important than their own political fortunes. It is unfortunate that in Sri-Lanka we do not have people of this calibre. Some years ago there were some remarkable men like Wilmot Perera and Edmund Samarakody. But people of that stature have gone out of business. In such a situation it is futile to expect the Select Committee to find a solution to the national problem.

Coutinued from Page 1

another of the speakers who appreciated the work the Rev. Earl Solomons was doing in Batticaloa. Fr. Swaminathan said, he had become a frequent visitor to the Home and was happy to see the completion of the building which could now provide adequate facilities for the children.

During the day affter a long drought that Batticaloa had experienced, there were heavy showers of rain. The rains however subsided just in time for the function giving a cool and pleasant atmosphere in which the function took place.

A Fellowship Tea followed the Public Meeting bringing to a close an eventful day at the St. John's Church Centre, Batticaloa.

### First Woman Deacon In the Jaffna Diocese

Saturday the 21st of March was a historic day for the Jaffna Diocese of the C. S. I. when for the first time a woman was ordained as a Deacon. Mrs. Angela Rammani Tampiyappa, the wife of Mr. T. A. Tampiyappa of Uduvil has been an active honorary Worker in the Diocese for some years. She has followed a course of Theological Studies of the Serampore University as an external student. She followed the Graduate Course at the Ecumenical Institute, Bossey during the 1990 - 91 sessions. She is now a Full - Time Worker in the Diocese and Worker - in - Charge of the Pandateruppu Church.

The Ordination Service took place at the Cathedral Church at Vaddukoddai at 8 . 30 a. m. on the 21st of March, led by the Bishop, the Rt Rev. D. J. Ambalavanar. The Sermón on the occasion was preached by the Rev D S. Thiagarajah.

### The Rev. Dayalan Niles

We regret to report the death of the Rev. W. Dayalan Niles on Friday the 17th of July at Pembroke, U. S A, where he has been living for the last few years with his wife Constance Selvaranee and his three sons. Dayalan is the second son of the late Rev. Dr. D. T. Niles and Mrs. Dulcie Niles. He had his education at Jaffna Central College and Madras Christian College, Thambram. He had his Theological education at the United Theological College, Bangalore, where he obtained his B D. degree. He also followed his post graduate course of studies in Theology in the U S. and obtained the M. Th. degree. He joined the ministry of the Methodist Church in Sri Lanka and was a Pastor of the Point Pedro circuit for some years before he left for the U. S. He married Constance Selvaranee, a daughter of Mr. A. Thadchanamoorthy, Retired A. G. A., Jaffna and Mrs. Thadchanamoorthy. He leaves his wife Selvaranee and three sons - Daniel, Thuthian and Mithran and his older brother Dr Preman Niles and a host of friends and relations to bemoan his death. He had been ill for some time and died in his 51st year.

### W. N. S. Samuel

We regret to record the death of Mr. W. N. S. Samuel. Former Principal of Hartlev College Point Pedro, at the Christian Medical College, Vellore on the 26th of June, 1992. Mr. Samuel is an old boy of Hartley College, Point Pedro and of Jaffna College, Vaddukoddai, where he completed his Intermediate in Arts of the London University. Later, he gained his B. A. degree of the London University and joined the staff of Hartley College, Point Pedro, retiring as it's Principal. Mr. Samuel was a very active member of the Methodist Church in Point Pedro and was for one year Vice - President of the Ceylon Methodist Conference. He was briefly during his retirement Director of the CISRS and also Treasurer of the Board of Directors of Jaffna College. He was living in Madras for the last few years and died after a brief illness. His wife predeceased him some years ago.

### J. G. Arasaratnam

Mr. J G. Arasaratnam, formerly, Principal of the Nallur Training College, died after a brief illness on the 13th of June, 1992 in Colombo. He had his schooling at Jaffna Central College and was a Teacher at the Royal College from 1944 to 1950 On obtaining his B A. degree of the London University, he joined the Nallur Training College in 1950 and retired as it's Principal in 1969. During 1953 - 54, he followed a year's post graduate course at the Princeton Theological Seminary in the U. S. In Jaffna he actively took part in Church and community activities and was the President of the YMCA. The Young Men's Club and of the Jaffna Christian Union at various periods. He was also the Circuit Steward at the St. Peter's Methodist Church and a local Preacher. He married Yogaranee, a daughter of the late Dr. and Mrs. S. G. C. Mills of Manipay. The Christian community in his death has lost an outstandig lay leader.

### Discrimination against Tamils in Education Continues

One of the main grievances of the Tamils of Sri Lanka has been discrimination in the field of education. Two such glaring cases have been brought to light during the last few weeks

The first is in respect of the proportion of teachers to students at school in the various parts of the country. It has been pointed out that the proportion of teachers to students in the North - East Province is one to 47 whereas in the rest of the Country the proportion is one to 24. This means there are prortionately half the number of teachers to teach Tamil students as the number who teach Sinhalese students in the South.

The other glaring discrimination is in the cut off marks for University Admission that has been fixed for the Jaffna District in comparison to the Colombo District. On the basis of the 1990 / 91 G. C. E (A/L) Examination, we give below a few examples :

| | | | |
|---|---|---|---|
| Engineering 1 | — | Jaffna 290 | : Colombo 263 |
| Engineering 2 | — | Jaffna 285 | : Colombo 254 |
| Dental | — | Jaffna 269 | : Colombo 268 |
| Bio Science | — | Jaffna 243 | : Colombo 238 |
| Physical Science | — | Jaffna 235 | : Colombo 204 |
| Arts | — | Jaffna 254 | : Colombo 235 |
| Commerce | — | Jaffna 277 | : Colombo 260 |

The argument the government has coastantly presented to defend such discrimination is that some weightage had to be given to educationally under developed areas. One wonders how Colombo can be considered less developed than Jaffna. The Tamils' cry for separation cannot but be reinforced by such glaring discrimination.

⚜

### CORRECTION

In the news item entitled Bishop Kulandran in the last issue of the Morning Star dated 19 - 6 - 92 the condolence message reproduced was from Mr. N. Sabaratnam, the Retired Principal of Jaffna Hindu College and a former Editor of the Eelanaadu. We regret the omission of his name.

Registered as a News Paper at the P. O. Sri Lanka under No. Q/J/140/89 News Printed for the Jaffna Diocese of the Church of South India at The American Ceylon Mission Press, 182. 1st Cross Street. Jaffna on Friday the 07th of August 1992 and published by The Rev. G. D. ANANDARAJAN 182 First Cross Street Jaffna.